எஸ்டிசி எண்.417/2022 நாள்: 02.11.2023
அ.சா.1 சேவியர், த/பெ.சூசை

**சாட்சி மீண்டும் மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்குவிசாரணை:**

1. நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் விவசாயம் மற்றும் நெல் வியாபாரம் செய்து வருகிறேன். எதிரி எந்த வருசத்தில் அறிமுகம் ஆனார் என்றால் 2021ம் ஆண்டு. எதிரி என்னுடன் சேர்ந்து நெல் வியாபாரம் பார்த்தாரா என்றால் இல்லை. எதிரி யார் மூலம் எனக்கு அறிமுகம் ஆனார் என்றால் காங்கேயத்தை சேர்ந்த மகேந்திரன் மற்றும் சுரேந்திரன் மூலம் தெரியும். எதற்காக என்னிடம் எதிரியை அறிமுகப்படுத்தினார்கள் என்றால் நெல் வியாபாரம் சம்மந்தமாக அறிமுகப்படுத்தினார்கள்.

2. எதிரி நண்பர் என்ற அடிப்படையில் நான் கடன் கொடுத்தேன் என்றால் சரிதான். எதிரி என்ன வேலை பார்க்கிறார் என்றால் உசிலம்பட்டி தேவர் நினைவுக்கல்லூரியில் பேராசிரியராக பணிபுரிந்து வருகிறார். மேலும் நெல் வியாபாரமும் பார்ப்பார். நான் எவ்வளவு ரூபாய் எதிரிக்கு கடன் கொடுத்தேன் என்றால் ரூ.5,00,000/- கொடுத்தேன். நான் மேற்படி பணத்தை வியாபார ரீதியாக கொடுத்தேனா என்றால் தனிப்பட்ட குடும்ப செலவுக்காக கொடுத்தேன். எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்றால் 20.02.2022ம் தேதி கொடுத்தேன். மேற்படி நான் கொடுத்த ரூ.5,00,000/-ற்காக தான் எதிரி காசோலை வழங்கினார் என்றால் சரிதான். 22.03.2022 என பின் தேதியிட்டு காசோலை வழங்கினார்.

3. என்னிடம் ஒரு காசோலை தான் வழங்கினார் என்றால் சரிதான். எதிரி வழங்கிய காசோலையின் எண் 000102 என்றால் சரிதான். எனக்கு எத்தனை வங்கியில் வங்கி கணக்கு உள்ளது என்றால் தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி தேவகோட்டை கிளை வங்கி கணக்கு உள்ளது. மேலும் திருவாடனை ஸ்டேட் பேங்க ஆப் இந்தியா வங்கி கிளையிலும் கணக்கு உள்ளது. நான் எதிரி கொடுத்த காசோலையை தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி கிளையில் தான் வசூலுக்காக தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 13.04.2022ம் தேதி வசூலுக்காக தாக்கல் செய்தேன். 16.04.2022ம் தேதி எனக்கு தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியில் இருந்து ரிட்டன் மெமரண்டம் கொடுக்கப்பட்டது என்றால்

சரிதான்.

4. எனது நெல் கொள்முதல் வியாபார நிறுவனத்தின் பெயர் தங்கம் டிரேடர் என்றால் சரிதான். எதிரி எனக்கு கொடுக்க வேண்டிய ரூ.5,00,000/- பணத்திற்கு 11.05.2021ம் தேதி ரூ.3,00,000/- பணத்தை எனது வங்கி கணக்கு உள்ள தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி கிளையில் செலுத்தினார் என்றால் நெல் எதிரிக்கு 'கொடுத்தது சம்மந்தமாக எனக்கு மேற்படி பணத்தை செலுத்தினார். 16.06.2021ம் தேதி ரூ.2,00,000/- பணத்தை எதிரி எனக்கு எனது வங்கி கணக்கு உள்ள தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி கிளையில் செலுத்தினார் என்றால் பணம் அனுப்பினார் ஆனால் எந்த தேதியில் அனுப்பினார் என்று எனக்கு தெரியாது. நெல் வரவு-செலவு கணக்குகளுக்காக அனுப்பினார்.

5. எதிரி எனக்கு கொடுத்த காசோலை எண் 000102-ஐ எதிரி வங்கி கணக்கு வைத்துள்ள சிட்டி யூனியன் வங்கி உசிலம்பட்டி கிளையில் பணம் இல்லை என்று எனக்கு 23.03.2021ம் தேதி திருப்பப்பட்டது என்று சொன்னால் எனக்கு நியாபகம் இல்லை. எதிரிக்கு நான் ரூ.5,00,000/- கொடுக்கவில்லை என்றும் எதிரி 22.03.2021ம் தேதியிட்ட காசோலையை தான் என்னிடம் வழங்கினார் என்றும் அதை நான் 22.03.2022ம் தேதி என திருத்தம் செய்து வசூலுக்காக தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ.1ஆன காசோலையில் 2022 என உள்ளதில் கடைசியாக உள்ள இரண்டு திருத்தப்பட்டுள்ளது என்றும் உண்மையிலேயே 2021 என்று தான் குறிப்பிட்டு எனக்கு வழங்கப்பட்டது என்று சொன்னால் 2022 என்று தான் எனக்கு வழங்கப்பட்டது. திருத்தம் எதுவும் அதில் செய்யப்படவில்லை.

6. 22.03.2021ம் தேதியிட்ட எதிரி வழங்கிய காசோலையை நான் வசூலுக்காக 23.03.2021ம் தேதியே தாக்கல் செய்தேன் என்றும் மேற்படி விவரத்தை எனது வங்கி கணக்கு உள்ள தேவகோட்டையில் உள்ள தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி கிளை அல்லது திருவாடனையில் உள்ள ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கி கிளையில் 2021ம் வருடம் வங்கியின் வரவு-செலவு பட்டியலை பார்த்தால் தெரியும் என்று சொன்னால் நான் அவ்வாறு எதுவும் தாக்கல் செய்யவில்லை. 2021ம் வருட எனது வங்கி கணக்கு பட்டியல் விவரங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாரா உள்ளேன் என்றால் தயாராக இல்லை. நீதிமன்றம் கேட்டால் தாக்கல் செய்கிறேன்.

7. எனது 2021ம் வருட வங்கிப் பரிவர்த்தனை

விவரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் காசோலை எண். 000102 ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட விவரம் தெரிந்துவிடும் என்பதால் தான் நான் மேற்படி எனது வங்கி கணக்கு விவரத்தை தாக்கல் செய்ய தயாராக இல்லை என சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு 22.03.2021ம் தேதியில் தான் காசோலை கொடுத்தார் என்றும் அதை நான் 22.03.2022 என திருத்தம் செய்து எதிரியை மோசடி செய்ய வேண்டும் என்பதற்காக எனது வங்கி கணக்கு உள்ள உள்ள தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி கிளையில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(ஒப்பம்) ஆர்.எம். மாரிமுத்து, பி.ஏ., பி.எல்.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.